بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 31/07/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## 2026 பிரிட்டன் ஆண்டு மாநாட்டில் இறங்கிய இறை அருள்களும் ஜமாஅத் அல்லாத விருந்தினர்களின் கருத்துக்களும்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ۬ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

அல்லாஹ்வின் அருளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரிட்டன் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூன்று நாள் ஆண்டு மாநாடு, அல்லாஹ்வின் அருள்களைச் சேகரித்தவாறு தன் நிறைவை எட்டியது. மாநாட்டின் ஆயத்தப் பணிகளுக்குப் பல மாதங்கள் ஆகின்றன. ஒரு மாநாடு முடிந்தவுடனேயே அடுத்த ஆண்டின் ஆயத்தப் பணிகள் தொடங்கிவிடுகின்றன. இதற்கான முழு வேகம் மாநாட்டிற்குச் சில வாரங்களுக்கு முன்பே தொடங்குகிறது; ஆனால், மாநாட்டிற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்பு இது உச்சக்கட்டத்தை அடைகிறது. மாநாட்டின் நாட்களில் ஆயிரக்கணக்கான தன்னார்வப் பணியாளர்கள் - ஆண்கள், பெண்கள், முதியவர்கள், இளைஞர்கள் - தங்களின் முழு திறமையோடும் மனத்தூய்மையோடும் எல்லா நேரமும் தொண்டாற்றுகிறார்கள்.

ஆகவே, இந்த வகையில் மாநாட்டின் எந்தவொரு துறையில் பணியாற்றிய பணியாளர்களாக இருந்தாலும் சரியே! அவர்கள் அனைவரும் நன்றிக்கு உரியவர்கள் ஆவார்கள். அவர்கள் செய்யும் இந்த சேவைக்குச் சிறந்த நற்கூலியை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக! இவ்வாறே, எம்.டி.ஏ பணியாளர்களும் உள்ளார்கள்; அவர்களில் பலர் தன்னார்வலர்கள் ஆவர். பிறகு, பிரஸ் அண்ட் மீடியா குழுவினர் உள்ளனர். கனடாவைச் சேர்ந்த குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காதிம்கள் ஒவ்வோர் ஆண்டைப் போலவும் இவ்வாண்டும் பெரும் எண்ணிக்கையில் இங்கு வந்து அப்புறப்படுத்தும் பணிகளில் தொண்டாற்றினர். இப்போது ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர்களும் வரத் தொடங்கியுள்ளனர்; இவர்கள் அனைவரும் மிகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

**அனைத்து ஆண், பெண் பணியாளர்களுக்கு நானும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்; ஆனால் அதே நேரத்தில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் தங்களுக்கு வழங்கினான் என்பதற்காக அவர்களும் இறைவனுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும் என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். மக்கள் உங்களிடம் நன்றியுணர்வை வெளிப்படுத்துவதைக் கண்டு**

**நீங்கள் இறைவனின் முன் மேலும் குனிய வேண்டும்; இன்னும் பணிவுடையவர்களாக மாற வேண்டும். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை உங்களுக்கு வழங்குவானாக!**

பணியாற்றுபவர்களின் மன உறுதியினாலும் (சேவை) உணர்வினாலும் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் தப்லீக்கும் நடைபெறுகிறது. பல மக்கள் தங்களின் உணர்வுகளையும், நேரடியாகக் கண்டவற்றையும் கருத்துக்களாக எழுதி அனுப்புகிறார்கள். அவற்றில் சிலவற்றை நான் இப்போது முன்வைக்கிறேன்.

**கேம்பியாவின் தகவல் தொடர்பு அமைச்சர் எழுதுகிறார்**: "ஆண்டு மாநாட்டைக் கண்டு நான் அதன் ஆழமான உண்மையால் வியப்பில் மூழ்கிப்போனேன். இது, சுயநலமற்ற சேவையினாலும், அமைதியானத் தளராத தியாகத்தினாலும் கட்டமைக்கப்பட்ட ஒரு மகத்தான உலகளாவிய மாநாடாகும்."

**நைஜீரியாவிலிருந்து ஒரு மாநிலத்தின் அரசர் - கிட்டத்தட்ட அரை மாநிலம் இவரது நிர்வாகத்தின்கீழ் உள்ளது - அவர் கூறுகிறார்**: "நான் யு.கே ஆண்டு மாநாட்டிற்காகப் புறப்பட்டபோது, என் வாழ்க்கையில் இவ்வளவு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு மகத்தான, ஒழுங்கமைக்கப்பட்ட, ஆன்மிக மாநாட்டின் ஓர் அங்கமாக ஆகப்போகிறேன் என்று நான் சிறிதும் எண்ணியிருக்கவில்லை. இங்கு வந்தடைந்த பிறகு, நான் அசாதாரணமான ஒழுக்கம், சகோதரத்துவம், படைப்பினத் தொண்டு ஆகியவற்றின் நடைமுறை முன்மாதிரியைக் கண்டது மட்டுமின்றி, உலகின் பல்வேறு நாடுகளையும் கோத்திரங்களையும் சேர்ந்த மக்கள் அன்பு, மரியாதை, சகோதரத்துவப் பிணைப்பில் இணைந்திருப்பதையும் கண்டேன்."

**அவரது மனைவி கூறுகையில்**: "பெண்களுக்காகச் செய்யப்பட்டிருந்த முன்மாதிரியான ஏற்பாடுகள், அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கண்ணியம், சுதந்திரம், சூழல் ஆகியவற்றைக் கண்டு எனக்கு மிகவும் ஆச்சரியம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான பெண்கள் மிகவும் கண்ணியத்துடன் மாநாட்டில் பங்கேற்பதையும் வந்து செல்வதையும் கண்டபோது இஸ்லாத்தைப் பற்றிய எனது பல எண்ணங்கள் மாறிவிட்டன."

**செனிகலிலிருந்து வந்திருந்த விருந்தினரான செயிண்ட் லூயிஸின் முன்னாள் ஆளுநர் கூறுகிறார்**: "நான் அனைத்து சொற்பொழிவுகளையும் கவனமாகக் கேட்டேன்; பல்வேறு மொழியாக்கங்களுக்கான ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக இருந்தன. இதன் காரணமாக அனைத்து சொற்பொழிவுகளையும், செய்திகளையும் எங்களால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிந்தது. மாநாட்டின் போது மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கப்பட்ட செய்தி என்னவென்றால் அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தின் செய்தியாகும்."

**லக்சம்பர்க்கிலிருந்து (Luxembourg) நீதிமன்ற வழக்கறிஞர் (Barrister) ஒருவர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்**: "மாநாட்டின் இந்த மூன்று நாட்களும் என் வாழ்க்கையின் மிக முக்கியமான நாட்களாக மாறிவிட்டன. இவ்வளவு பெரிய, ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் இஸ்லாமிய மாநாட்டை நான் முதன்முறையாக என் வாழ்நாளில் பார்க்கிறேன். ஆன்மாவை உருக்கும் உலகளாவிய பைஅத்தின் காட்சி என்னால் மறக்க முடியாத ஒன்றாக இருந்தது. ஜமாஅத்தின் இமாமையும் நான்

சந்தித்தேன்; சந்திப்பிற்கு முன்பு எனக்குப் பதற்றமாக இருந்தது. ஆனால் அவர்களைச் சந்தித்த பிறகு என் பதற்றம் நீங்கிவிட்டது.”

**புதிதாக பைஅத் செய்த ஒரு நபர் கூறுகிறார்**: “இஸ்லாத்தை ஏற்பதற்கு முன் நான் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவனாக இருந்தேன். ஈமானுக்கு இசையுடன் தொடர்பு உண்டு என்றே எங்களுக்கு எப்போதும் கற்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் என்னால் ஒருபோதும் இந்த முறையில் உண்மையான ஆன்மிக அமைதியையோ, இறை நெருக்கத்தையோ உணர முடிந்ததில்லை. முஸ்லிமான பிறகு நான் தொழுகைகளைத் தொழுது வந்தேன்தான்! ஆனால், (அதில்) உருக்கத்தை உணர முடியவில்லை. ஆண்டு மாநாட்டில் பங்கேற்றபோது என் மீது எவ்வாறான ஆன்மிக நிலை ஏற்பட்டது என்றால், என் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்துகொண்டே இருந்தது; நான் தொடர்ந்து துஆக்கள் செய்துகொண்டே இருந்தேன். கிலாஃபத்துடனும் அல்லாஹ்வுடனும் எனக்கு ஓர் ஆன்மிகத் தொடர்பு ஏற்பட்டு விட்டது.”

**செக் குடியரசிலிருந்து இரு பேராசிரியர்கள் வந்திருந்தனர். அவர்கள் கூறுகிறார்கள்**: “செக் குடியரசுக்குத் திரும்பிச் சென்று எங்கள் சக ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் நாங்கள் கூறக்கூடிய விஷயம் என்னவென்றால், இந்த மகத்தான சபையின் அனுபவத்தை நீங்கள் அனைவரும் நேரில் வந்து பெற வேண்டும் என்பதே ஆகும். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவிற்குப் பிறகு எங்களுக்கு இஸ்லாத்தைப் பற்றியும் இறையச்சத்தைப் பற்றியும் உண்மையான புரிதல் கிடைத்தது.”

**கஸாகஸ்தானிலிருந்து ஒரு பெண் மாநாட்டில் பங்கேற்றிருந்தார். அவர் கூறுகிறார்**: “ஜமாஅத்தின் இமாம் மற்றும் இதர பேச்சாளர்களின் சொற்பொழிவுகளில் ஈமான், உயரிய நல்லொழுக்கம், பரஸ்பர நல்லிணக்கம், இளைஞர்களின் பிரச்சினைகள் மற்றும் சமூகத்தின் தர்பிய்யத் போன்ற முக்கிய தலைப்புகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது.”

**அமெரிக்காவிலிருந்து சட்டப் பேராசிரியர் ஒருவர் வந்திருந்தார்; அவர் கூறுகிறார்**: “எனக்கு உலகம் முழுவதும் பல்வேறு மாநாடுகளிலும் கூட்டங்களிலும் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. ஆனால் யு.கே. ஆண்டு மாநாட்டின் அனுபவம் இவை அனைத்திலிருந்தும் தனித்துவமானது. நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்திருந்த மக்கள், பல்வேறு மார்க்கங்கள், சமுதாயங்கள் மற்றும் வாழ்வின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த விருந்தினர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. பல்வேறு கண்காட்சிகள் என்னை மிகவும் கவர்ந்தன. உயர்கல்வி கற்ற மருத்துவர்கள், பொறியாளர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் இதர வல்லுநர்கள் மிகப் பணிவுடன் தொண்டாற்றிக் கொண்டிருந்தது என்னை மிகவும் கவர்ந்தது.”

**பிரேசிலைச் சேர்ந்த ஒரு தொலைக்காட்சி செய்தியாளர் கூறுகிறார்**: “இந்த நிகழ்ச்சியின் பிரம்மாண்டத்தையும் பரந்த அளவையும் கண்டு நான் வியப்படைந்தேன். குறிப்பாக லங்கர்கானாவின் அளவும், உணவு தயாரிக்கும் இடங்களும் மிகவும் பரந்ததாகவும், நவீனமாகவும், ஒழுங்கமைக்கப்பட்டதாகவும், மிகவும் தூய்மையாகவும் இருந்தன.”

**பிலிப்பைன்ஸிலிருந்து பேராசிரியர் ஒருவர் தம் மனைவியுடன் வந்திருந்தார். அவரும் ஒரு பேராசிரியை ஆவார். அவர் கூறுகிறார்**: “தன்னார்வலர்களின்

உழைப்பைக் கண்டு வியப்படைந்தேன்; அவர்கள் தங்கள் உழைப்பால் இந்தத் தற்காலிக நகரத்தையே உருவாக்கியிருக்கிறார்கள் என்பதைக் கண்டு ஆச்சரியமுற்றேன்.”

**எல்சால்வடோரிலிருந்து (El Salvador) வந்த ஒரு விருந்தினர் - இவர் மத்திய அமெரிக்க நாடாளுமன்றத்தில் எல்சால்வடோரின் பிரதிநிதியாக உள்ளார் - அவர் கூறுகிறார்**: “கலீஃபத்துல் மஸீஹ் அவர்களைச் சந்தித்த பிறகு, கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்குத் தம் ஜமாஅத்தைப் பற்றிப் பெருமளவு தகவல்கள் தெரிந்துள்ளன என்பதில் எனக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.”

**பெலீஸிலிருந்து (Belize) புதிதாக அஹ்மதிய்யத்தை ஏற்ற ஒரு பெண் கூறுகிறார்**: “நாங்கள் மிகவும் சிறிய ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள். நான் வாழும் நகரத்தின் மக்கள் தொகை ஐம்பதாயிரம் மட்டுமே. நூறு பேர் கூடினாலே சண்டைகள் தொடங்குகின்றன. ஆனால், மாநாட்டின் ஏற்பாட்டில் அசாதாரணமான அமைதி நிலவியது.”

**பல்கேரியாவிலிருந்து வந்திருந்த ஒரு முக்கியப் பிரமுகர் கூறினார்**: “மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகள் மிகவும் தகவல்கள் நிறைந்ததாகவும், அறிவார்ந்ததாகவும், உயர்தரமானதாகவும் இருந்தன. பேச்சாளர்கள் மார்க்கம் மற்றும் அறிவியல் சார்ந்த தலைப்புகளை மிகவும் அழகிய முறையில் விளக்கினர்; இது வருகை தந்தவர்களின் அறிவையும் ஞானத்தையும் அதிகரித்தது.”

**செனிகலைச் சேர்ந்த, தமது பகுதியின் மார்க்கத் தலைவராக இருக்கும் ஒருவர் கூறுகிறார்**: “ஜமாஅத் இமாமுடன் எனக்கு ஒரு சந்திப்பு நடைபெற்றது; அதன் மூலம் ஜமாஅத்தைப் புரிந்துகொள்வதற்கு எனக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. உண்மையிலேயே, உள்ளத்தின் ஆழத்திலிருந்து நான் உங்களுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.”

**செனிகலிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பங்கேற்றார். அவர் கூறுகிறார்**: “வெறும் வார்த்தையளவிலான இஸ்லாத்தைக் காட்டிலும், இங்கு உண்மையாகச் சேவை செய்யும் இஸ்லாத்தைக் கண்டேன். அள்ளிக் கொடுக்கும் கரங்களைக் கண்டேன்; மன்னிக்கும் இதயங்களைக் கண்டேன்; மற்றவர்களுக்காக எப்போதும் திறந்திருக்கும் கதவுகளைக் கண்டேன்.”

**கொசோவோவிலிருந்து (Kosovo) மிகுந்த மரியாதைக்குரிய ஆய்வாளரும், கல்வியாளரும், பேராசிரியருமான ஒருவர் மாநாட்டில் பங்கேற்றார். அவர் கூறுகிறார்**: “ஜமாஅத் இமாமின் உரைகளைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது; அவர்களுடன் சந்திப்பும் நடைபெற்றது. அமைதி, மத நல்லிணக்கம், ஒற்றுமை, மனித சமத்துவம், பரஸ்பர மரியாதை மற்றும் சமூகத்தின் ஒவ்வொரு தனிநபரையும் அரவணைத்துச் செல்லுதல் ஆகியவற்றைக் குறித்து (மாநாட்டில்) மீண்டும் மீண்டும் அசாதாரணமாக அழுத்தம் கொடுக்கப்பட்டது என்னை மிகவும் கவர்ந்தது.”

**ஸ்பெயினிலிருந்து பெத்ரோ அபாத் (Pedro Abad) நகர மேயர் வந்திருந்தார். அவர் கூறுகிறார்**: “ஆண்டு மாநாடு நமக்கு எதைக் காண்பதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளது என்றால், இது வெறும் (மத) நம்பிக்கையின் கொண்டாட்டம் மட்டுமல்ல; மாறாக, பல்வேறு நாடுகள், கலாச்சாரங்கள் மற்றும் யதார்த்தங்களைக்

கொண்ட மக்கள் ஒன்றிணைந்து வாழ்வதின் ஓர் அசாதாரண எடுத்துக்காட்டாக விளங்கியதைக் காட்டியது.”

*இவ்வாறே, மாநாட்டின் அசாதாரணமான நிர்வாகத்தையும் ஆன்மிகச் சூழலையும் பாராட்டிய மேலும் சில கண்ணியமிக்க விருந்தினர்களின் அனுபவங்களையும் கருத்துகளையும் ஹுஸூர் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.*

கிரீஸ் நாட்டின் ஒரு பெண் விருந்தினர் மாநாட்டின் அனைத்து அம்சங்களையும் பாராட்டிய பிறகு ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு, அது தமக்குப்பிடிக்கவில்லை என்று கூறினார். “சில பெண்கள் இஸ்லாமிய ஆடைக் கட்டுப்பாட்டை (பர்தாவை) சரிவரப் பின்பற்றவில்லை என்றும் சில ஆண்கள் பார்வைகளைத் தாழ்த்துவதில் பலவீனத்தைக் காட்டினர்” என்றும் கூறினார்.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* இது குறித்து நான் குறிப்பாக அறிவுறுத்தியிருந்த போதிலும் இவ்வாறு நடந்துள்ளது. எதிர்மறையான கருத்தையும் நமது சீர்திருத்தத்திற்காக நாம் செவிமடுக்க வேண்டும். அந்நியர்கள் நம்மை மிகவும் கூர்ந்து கவனிக்கிறார்கள் என்பதையும் இஸ்லாத்தின் உண்மையான தோற்றத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் எந்தவொரு வாய்ப்பையும் நாம் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்பதையும் அலட்சியமாக நடந்து கொண்டவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்! ‘நம்மை நோக்கி விரல் நீட்டுவதற்கு காரணியாக அமையும் எந்தவொரு வாய்ப்பையும் அந்நியர்களுக்குக் கொடுக்காதீர்கள்’ என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் இந்த மேற்கோளையும் நான் மாநாட்டுச் சொற்பொழிவுகளின் போது எடுத்துரைத்திருந்தேன்.

*மாநாட்டிற்குப் பிரஸ் அண்ட் மீடியாவில் கிடைத்த மிகச் சிறந்த ஊடகக் கவனம் குறித்தும் ஹுஸூர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அச்சு ஊடகம் (Print Media), வானொலி, தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக ஆண்டு மாநாட்டின் செய்திகள் பரவலாகப் பரப்பப்பட்டன; மேலும், பல்வேறு நாளிதழ்களும் தொலைக்காட்சி அலைவரிசைகளும் இம்மாநாட்டைச் செய்தியாக ஒளிபரப்பின.*

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* அல்லாஹ் இந்த மாநாட்டின் நல்விளைவுகளை ஜமாஅத்தின் உறுப்பினர்கள் மத்தியில் நிலைநிறுத்துவதுடன், மக்களுக்கும் நல்வழிகாட்டி அவர்களை உண்மையான இஸ்லாத்தின் பக்கமும் அஹ்மதிய்யத்தின் பக்கமும் ஆர்வமூட்டுவானாக! ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)